# ஜூன் 15-இல் கரையைக் கடக்கிறது 'பிபர்ஜாய்'

**அகமதாபாத், ஜூன் 11:** அரபிக் கடலில் உருவாகி, அதிதீவிர புயலாக உருமாறியுள்ள 'பிபர்ஜாய்', வரும் 15-ஆம் தேதி செளராஷ்டிரம்-கட்ச் வளைகுடா பகுதியில் கரையைக் கடக்க வாய்ப்புள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கிழக்கு மத்திய அரபிக் கடலில் கடந்த 6-ஆம் தேதி உருவாகிய 'பிபர்ஜாய்' புயலானது ஞாயிற்றுக்கிழமை காலை நிலவரப்படி, குஜராத்தின் போர்பந்தருக்கு தெற்கு-தென்கிழக்கு திசையில் சுமார் 480 கி.மீ. தொலைவிலும் துவாரகா நகருக்கு தெற்கு-தென்கிழக்கு திசையில் சுமார் 530 கி.மீ. தொலைவிலும் நிலைகொண்டிருந்தது.

இந்நிலையில், இந்திய வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட அறிக்கையில், 'பிபர்ஜாய் புயலானது ஞாயிற்றுக்கிழமை காலை 5.30 மணியளவில் அதிதீவிரமாக உருமாறியது.

அந்தப் புயலானது குஜராத்தின் மாண்டவி நகருக்கும் பாகிஸ்தானின் கராச்சி நகருக்கும் இடைப்பட்ட பகுதியில் வரும் 15-ஆம் தேதி நண்பகலில் கரையைக் கடக்க வாய்ப்புள்ளது.


கட்ச் வளைகுடா பகுதியில் திங்கள்கிழமை காற்று மணிக்கு 40கி.மீ. முதல் 50கி.மீ. வேகத்திலும் அடுத்தடுத்த நாள்களில் மணிக்கு 55 முதல் 75 கி.மீ. வேகம் வரையிலும் வீச வாய்ப்புள்ளது. புயல் கரையைக் கடக்கும்போது கட்ச் வளைகுடா பகுதியில் தீவிர மழைபெய்ய வாய்ப்புள்ளது. புயல் கரையைக் கடக்கும்போது காற்றின் வேகம் மணிக்கு 135 கி.மீ. வரை அதிகரிக்க வாய்ப்புள்ளது.

**மீனவர்களுக்கு எச்சரிக்கை:** புயல் கரையைக் கடக்கும் வரை அரபிக் கடல் பகுதியில் மீன்பிடிக்கச் செல்ல வேண்டாமென்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. மத்திய, வடக்கு அரபிக் கடல் பகுதிகளில் மீனவர்கள் மீன்பிடிக்கச் செல்ல வேண்டாமென்றும் அறிவுறுத்தப்படுகிறது.

## அதிதீவிர புயலாக மாறியது




குஜராத் மாநிலம் துவாரகாவில்
சீற்றத்துடன் காணப்படும் கடற்கரைப் பகுதி.



கட்ச் வளைகுடா பகுதியில் ஏற்கெனவே மீன்பிடிக்கச் சென்ற மீனவர்கள் உடனடியாகக் கரை திரும்புமாறு அறிவுறுத்தப்படுகிறது' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**தயார்நிலையில் குஜராத்:** 'பிபர்ஜாய்' புயலை எதிர்கொள்வதற்கான தயார்நிலை நடவடிக்கைகளை குஜராத் அரசு மேற்கொண்டுள்ளது.

கடலோர மாவட்டங்களைச் சேர்ந்த ஆட்சியர்களுடன் மாநில முதல்வர் பூபேந்திர படேல் ஞாயிற்றுக்கிழமை சிறப்புக் கூட்டம் நடத்தினார். அப்போது புயலை எதிர்கொள்வதற்கு மேற்கொள்ள வேண்டிய தயார் நடவடிக்கைகள் குறித்து அவர்கள் விவாதித்ததாக அரசு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ராணுவம், இந்திய கடற்படை, கடலோரக் காவல் படை, மீட்புப் படை உள்ளிட்டவற்றைச் சேர்ந்த பிரதிநிதிகளும் அக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

**6 மாவட்டங்களில்...:** கட்ச் வளைகுடா கடற்கரைப் பகுதியில் உள்ள கட்ச், ஜாம்நகர், மோர்பி, கிர் சோம்நாத், போர்பந்தர், தேவபூமி துவாரகா ஆகிய 6 மாவட்டங்களும் புயலால் பாதிக்கப்பட வாய்ப்புள்ளதாகக் கணிக்கப்பட்டுள்ளது.

அதன் காரணமாக, அந்த மாவட்ட நிர்வாகங்களும் தீவிர முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. தேசிய பேரிடர் மீட்புப் படையினரும், மாநில பேரிடர் மீட்புப் படையினரும் அந்த மாவட்டங்களில் தயார்நிலையில் நிறுத்தப்பட்டுள்ளனர்.

6 மாவட்டங்களிலும் கடற்கரையில் இருந்து 5 முதல் 10 கி.மீ. தூரம் வரை வசிக்கும் மக்களைப் பாதுகாப்பான இடங்களில் தங்கவைப்பதற்காக சிறப்பு முகாம்களை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## அமைச்சர்களுக்குப் பொறுப்பு



முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்பார்வையிடுவதற்காக மூத்த அமைச்சர்கள் கொண்ட குழுவை அமைத்து மாநில முதல்வர் பூபேந்திர படேல் உத்தரவிட்டுள்ளார்.

அமைச்சர்கள் ரிஷிகேஷ் படேல், கனுபாய் தேசாய், ராகவ்ஜி படேல், குவார்ஜி பவாலியா, முலு பேரா, ஹர்ஷ் சங்வி, ஜகதீஷ் விஸ்வகர்மா, பர்ஷோத்தம் சோலங்கி ஆகியோர் பணிகளை மேற்பார்வையிட உள்ளதாக முதல்வர் அலுவலகம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மத்திய உள்துறை செயலர் ஆலோசனை

**புது தில்லி, ஜூன் 11:** 'பிபர்ஜாய்' புயலை எதிர்கொள்வதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து மத்திய அரசின் பல்வேறு அமைச்சகங்கள் மற்றும் அமைப்புகளுடன் மத்திய உள்துறை செயலர் அஜய் பல்லா ஞாயிற்றுக்கிழமை ஆலோசனை மேற்கொண்டார்.

இயற்கை பேரிடர்களின்போது மீட்புக் கொள்கை மற்றும் திட்டங்களை அமலாக்கும் தேசிய நிர்வாகக் குழுவின் கூட்டம், தில்லியில் அஜய் பல்லா தலைமையில் நடைபெற்றது. இதில், பிபர்ஜாய் புயலை எதிர்கொள்வதில் மாநில அரசுக்கு உதவுவதற்காக, தேசியப் பேரிடர் மீட்புப் படை, ராணுவம், கடற்படை, விமானப் படை, கடலோரக் காவல் படை குழுக்களை போதிய எண்ணிக்கையில் பணியமர்த்துவது குறித்து ஆய்வு செய்யப்பட்டது.

பல்வேறு அமைச்சகங்கள், தேசிய வானிலை ஆய்வு மையம், தேசியப் பேரிடர் மீட்புப் படை உள்ளிட்ட அமைப்புகளின் உயரதிகாரிகள், குஜராத் மாநில அரசின் தலைமைச் செயலர் உள்ளிட்டோர் இக்கூட்டத்தில் பங்கேற்றனர்.

EVA STALIN

# ‘நான் முதல்வன்’ திட்டத்தின் கீழ் 1,425 பேருக்கு பணி ஆணை

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்



**சென்னை, ஜூன் 11:** ‘நான் முதல்வன்’ திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்ற 1,425 பேருக்கு பணி நியமன ஆணைகளை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்.

‘நான் முதல்வன்’ திட்டத்தின் கீழ் திறன் பயிற்சி பெற்ற கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவர்களுக்கான வேலைவாய்ப்பு முகாம் சென்னை பல்கலைக்கழகத்தில் சனிக்கிழமை (ஜூன் 10) நடைபெற்றது. இந்த முகாமில் மாநில அளவில் தேர்வு செய்யப்பட்ட 1,425 பேருக்கு பணி நியமன ஆணைகளை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்.

பின்னர் அவர் பேசியது: கல்லூரி மாணவர்களுக்கு நவீன பாடப்பிரிவுகளில் பயிற்சிகள் வழங்கி அவர்களுக்குத் தகுதியான வேலைவாய்ப்புகள் கிடைக்க வேண்டும் என்ற தொலைநோக்குடன் ‘நான் முதல்வன்’ திட்டம் தொடங்கப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் ஓராண்டிலேயே பொறியியல் மற்றும் கலை அறிவியல் கல்லூரிகளில் 13 லட்சத்துக்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு திறன் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

பயிற்சி பெற்றவர்களுக்காக இதுவரை நடத்தப்பட்ட வேலைவாய்ப்பு முகாம்களில் பொறியியல் கல்லூரிகளில் 64,943 பேர், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 78,196 பேர் பணிவாய்ப்பு பெற்றுள்ளனர். இந்த மாதம் இறுதிவரை இதுபோன்ற முகாம்கள் நடத்தப்படும் என்றார் அவர்.

இந்த வேலைவாய்ப்பு முகாமில் செயின்ட் கோபின், மைக்ரோ சாப், மிஸ்டர் கூப்பர், டெக் மகேந்திரா, ஆதித்யா பிர்லா, பைஜீஸ், பிளிப்காட், ஹெச்டிஎப்சி, இந்தியா சிமென்ட்ஸ், பாக்ஸ் கான், முத்தூட் பைனான்ஸ், சுதர்லேண்ட், ஸ்டார் ஹெல்த் போன்ற முன்னணி நிறுவனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட 1,425 பேருக்கு பணி நியமன ஆணைகளை அமைச்சர் உதயநிதி வழங்கினார்.

நிகழ்ச்சியில், மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலர் மற்றும் சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறைச் செயலர் ககன் தீப் சிங் பேடி, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழக நிர்வாக இயக்குநர் ஜெ.இன்னசென்ட் திவ்யா, ‘நான் முதல்வன்’ திட்ட முதன்மைச் செயல் அலுவலர் டாக்டர் ஜெயபிரகாசன் உள்ளிட்ட உயரதிகாரிகள் பங்கேற்றனர்.

# பிரெஞ்ச் ஓபன்: ஜோகோவிச் சாம்பியன்

## 23–ஆம் கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்று புதிய சாதனை

**பாரீஸ், ஜூன் 11:** பிரெஞ்ச் ஓபன் போட்டியில் சாம்பியன் பட்டத்தை கைப்பற்றியதன் மூலம் 23-ஆவது முறையாக கிராண்ட்ஸ்லாம் சாம்பியன் பட்டத்தை கைப்பற்றி புதிய சாதனை படைத்துள்ளார் ஜோகோவிச்.

நான்கு கிராண்ட்ஸ்லாம் பந்தயங்களில் இரண்டாவதான பிரெஞ்ச் ஓபன் போட்டி பாரீஸில் நடைபெற்று வருகிறது. மகளிர் பிரிவில் நடப்பு சாம்பியன் இகா ஸ்வியாடெக் பட்டம் வென்றிருந்தார்.

இந்நிலையில் ஞாயிற்றுக்கிழமை ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதி ஆட்டம் நடைபெற்றது. இதில் செர்பிய வீரர் ஜோகோவிச் - நார்வே வீரர் கேஸ்பர் ரூட் மோதினர்.

முதல் செட்டில் கேஸ்பர் ரூட் அதிரடியாக ஆடி அனுபவம் வாய்ந்த ஜோகோவிச்சுக்கு கடும் சவாலை ஏற்படுத்தினார். இருவரும் மாறி, மாறி புள்ளிகளைக் குவித்தனர். கடும் போராட்டத்துக்குபின் 7-6 என முதல் செட்டை ஜோகோ கைப்பற்றினார். அதன்பின் இரண்டாம் செட்டை எளிதாக 6-3 என கைப்பற்றிய நிலையில், மூன்றாவது செட்டில் மீண்டும் சவாலைத் தந்தார் கேஸ்பர் ரூட்.



கோப்பையுடன் ஜோகோவிச்.

இறுதியில் அந்த செட்டையும் 7-5 எனக் கைப்பற்றினார் ஜோகோவிச்.

**23–ஆவது கிராண்ட்ஸ்லாம் பட்டம்:** இந்த வெற்றி மூலம் பிரெஞ்ச் ஓபனில் மூன்றாவது மற்றும் ஒட்டுமொத்தமாக 23 கிராண்ட்ஸ்லாம் சாம்பியன் பட்டங்களை கைப்பற்றி புதிய சாதனை படைத்தார் ஜோகோவிச்.

ஏற்கெனவே நடாலுடன் 22 கிராண்ட்ஸ்லாம் பட்டங்கள் வென்ற சாதனையை சமன் செய்திருந்த ஜோகோவிச் அதை தற்போது முறியடித்துள்ளார்.



கேஸ்பர் ரூட்

10 ஆஸி. ஓபன், 7 விம்பிள்டன், தலா 3 யுஎஸ் ஓபன், பிரெஞ்ச் ஓபன் பட்டங்கள் இதில் அடங்கும். மேலும் கேரியர் கிராண்ட்ஸ்லாம் வென்றவர் என்ற சிறப்பைப் பெற விம்பிள்டன், யுஎஸ் ஓபனில் ஜோகோ வெல்ல வேண்டும்.

EVA STALIN

# ஆசிய செஸ்: திவ்யா தேஷ்முக் சாம்பியன்



சாம்பியன் பட்டம் வென்ற திவ்யா தேஷ்முக், வெள்ளி வென்ற மேரி ஆன் கோம்ஸ்.

**அலமாட்டி, ஜூன் 11:** ஆசிய கான்டினென்டல் செஸ் சாம்பியன்ஷிப் போட்டியில் மகளிர் பிரிவில் இந்திய இளம் வீராங்கனை திவ்யா தேஷ்முக் சாம்பியன் பட்டம் வென்றார். மற்றொரு வீராங்கனையான மேரி ஆன் கோம்ஸ் வெள்ளி வென்றார்.

கஜகஸ்தான் தலைநகர் அலமாட்டியில் நடைபெறும் இப்போட்டியின் இறுதி ஆட்டம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. 17 வயதான திவ்யே தேஷ்முக்கும், கஜகஸ்தானின் ஸைனியா பாலபெயாவும் மோதினர். இதில் 9-ஆவது சுற்றில் டிரா செய்து 7.5 புள்ளிகளுடன் சாம்பியன் பட்டத்தைக் கைப்பற்றினார்.

மேரி ஆன் கோம்ஸும் இறுதி சுற்றில் டிரா கண்டு 6.5 புள்ளிகளுடன் வெள்ளிப் பதக்கம் வென்றார். சாக்ஷி சிட்லாங்கே 5.5 புள்ளிகளுடன் 7-ஆம் இடத்தைப் பெற்றார்.

ஓபன் பிரிவில் ஜிஎம் அபிமன்யு புராணிக் 6.5 புள்ளிகளுடன் 4-ஆவது இடத்தையே பெற்றார். அர்ஜுன் எரிகைசி 6, சேதுராமன் 7-ஆவது இடங்களைப் பெற்றனர்.



பட்டம் வென்ற இந்திய வீராங்கனைகள்

## ஆசிய ஜூனியர் மகளிர் ஹாக்கி | இந்தியா சாம்பியன்

**ககமிகாஹரா, ஜூன் 11:** ஆசிய ஜூனியர் மகளிர் ஹாக்கிப் போட்டியில் முதன்முறையாக சாம்பியன் பட்டத்தை கைப்பற்றியது இந்தியா.

ஆசிய ஹாக்கி கூட்டமைப்பு சார்பில் ஜப்பானின் ககமிகாஹரா நகரில் நடைபெற்ற இப்போட்டியின் இறுதி ஆட்டத்துக்கு இந்தியா-தென்கொரிய அணிகள் தகுதி பெற்றன.

நான்கு முறை சாம்பியன் தென்கொரியா தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்தும் எனக் கருதப்பட்ட நிலையில், இந்திய வீராங்கனைகள் சவாலைத் தரும் வகையில் ஆடினர். பதிலுக்கு தென்கொரிய வீராங்கனைகளும் கவுன்டர் அட்டாக் செய்தனர். 22-ஆவது நிமிஷத்தில் பெனால்டி கார்னர் மூலம் அற்புதமாக கோலடித்தார் அன்னு. இதனால் அதிர்ச்சி அடைந்த தென்கொரிய அணியினர் பதில் கோலடிக்க தீவிரமாக முயன்றதில் சில நிமிஷங்களிலேயே பார்க் சியோ இயோன் கோலடித்தார்.

இதனால் முதல்பாதி முடிவில் 1-1 என சமநிலை ஏற்பட்டது. இரண்டாவது பாதியில் இந்திய அணியினர் தொடர்ந்து தாக்குதல் ஆட்டத்தில் ஈடுபட 41-ஆவது நிமிஷத்தில் நீலம் அற்புதமாக பீல்ட் கோலடித்தார்.

அதன்பின் தென்கொரிய அணிக்கு கோலடிக்க பல வாய்ப்புகள் கிடைத்தும் பலனில்லை. இறுதியில் 2-1 என்ற கோல் கணக்கில் வென்று இந்தியா முதல் முறையாக பட்டத்தைக் கைப்பற்றியது. கேப்டன் ப்ரீத்தி ஆட்டநாயகி விருதைப் பெற்றார்.

இதற்கு முன்பு இந்தியா 2012-இல் ரன்னர் ஆக வந்திருந்தது.

சாம்பியன் பட்டத்தை வென்ற இந்திய அணியில் ஒவ்வொருவருக்கும் தலா ரூ.2 லட்சம் வெகுமதியை ஹாக்கி இந்தியா அறிவித்துள்ளது.

ICC WORLD TEST CHAMPIONSHIP

# உலக டெஸ்ட் சாம்பியன் ஆஸ்திரேலியா

**லண்டன், ஜூன் 11:** இந்தியாவை 209 ரன்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி அபார வெற்றியுடன் முதன்முறையாக ஐசிசி உலக டெஸ்ட் சாம்பியன் பட்டத்தை கைப்பற்றியது ஆஸ்திரேலியா.

சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐசிசி) சார்பில் உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் போட்டி நடத்தப்பட்டு வருகிறது. இதன் இறுதி ஆட்டத்துக்கு முதலிரண்டு இடங்களைப் பெற்ற அணிகளான ஆஸ்திரேலியா-இந்தியா தகுதி பெற்றன. இந்நிலையில் இறுதி ஆட்டம் லண்டன் ஓவல் மைதானத்தில் 7-ஆம் தேதி தொடங்கியது.

முதல் இன்னிங்ஸில் ஆஸ்திரேலியா 469 ரன்களுக்கும், இந்தியா 296 ரன்களுக்கும் ஆல் அவுட்டானது. இதைத் தொடர்ந்து இரண்டாவது இன்னிங்ஸை ஆடிய ஆஸ்திரேலியா 270/8 ரன்களுடன் டிக்ளேர் செய்தது.

444 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற கடின இலக்குடன் தனது இரண்டாவது இன்னிங்ஸை தொடங்கிய இந்திய அணி நான்காம் நாளான சனிக்கிழமை ஆட்ட நேர முடிவில் 164/3 ரன்களுடன் நிறைவு செய்தது.

கடைசி நாளான ஞாயிற்றுக்கிழமை 280 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் கோலி-ரஹானே இணை களமிறங்கியது.

கோலி 49 ரன்களுடன் வெளியேற, ஆல்ரவுண்டர் ரவீந்திர ஜடேஜா டக் அவுட்டானார். ரஹானே 46 ரன்களுடன் அவுட்டான நிலையில், இந்தியாவின் வீழ்ச்சி தொடங்கியது. ஸ்ரீகர் பரத் 23, சர்துல் தாக்குர் 0, உமேஷ் யாதவ் 1, முகமது சிராஜ் 1 ரன்களுடன் வந்த வேகத்தில் பெவிலியன் திரும்பினர்.

முகமது ஷமி 13 ரன்களுடன் களத்தில் இருந்தார்.

**இந்தியா 234 ஆல் அவுட்:** உணவு இடைவேளைக்கு முன்பே வெறும் 70 ரன்களுக்கு 7 விக்கெட்டுகளை இழந்து 234 ரன்களுக்கு ஆல் அவுட்டாகி தோற்றது இந்தியா.

**நாதன் லியான், ஸ்காட் போலண்ட் அபாரம்:** ஆஸி. தரப்பில் சிறப்பாக பௌலிங் செய்த நாதன் லியான் 4-41, ஸ்காட் போலண்ட் 3-46, மிச்செல் ஸ்டார்க் 2-77 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

**209 ரன்கள் வித்தியாசம்:** இறுதியில் இந்திய அணியை 209 ரன்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியது ஆஸ்திரேலியா.

**முதல் சாம்பியன் பட்டம்:** ஏற்கெனவே ஆஸி. அணி 5 முறை ஒரு நாள் உலகக் கோப்பை பட்டத்தையும், டி20 உலக சாம்பியன் பட்டத்தை ஒரு முறையும் வென்றிருந்தது. தற்போது முதன்முறையாக உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் பட்டத்தை கைப்பற்றியுள்ளது.

**தொடரும் இந்தியாவின் சோகம்:** கடந்த 2013-இல் இறுதியாக ஐசிசி சாம்பியன்ஸ் கோப்பையை தோனி தலைமையில் இந்தியா வென்றிருந்தது. அதன்பின்னர் கடந்த 10 ஆண்டுகளாக எந்த ஐசிசி போட்டியிலும் இந்தியாவால் கோப்பை வெல்ல முடியவில்லை. முதல் டபிள்யுடிசி சாம்பியன்ஷிப் போட்டியிலும் நியூஸிலாந்திடம் 8 விக்கெட் வித்தியாசத்தில் தோற்று பட்ட வாய்ப்பை இழந்திருந்தது இந்தியா.

ஐசிசி போட்டிகளில் பட்டம் வெல்ல முடியவில்லை என்ற சோகம் தொடருகிறது.


மேஸ் எனப்படும் கோப்பையுடன் ஆஸ்திரேலிய அணியினர்

## சுருக்கமான ஸ்கோர்

### முதல் இன்னிங்ஸ்

**ஆஸ்திரேலியா 469/10** (121.3 ஓவர்கள்)

| | |
|---|---|
| டிராவிஸ் ஹெட் | 163 |
| ஸ்டீவ் ஸ்மித் | 121 |
| பந்துவீச்சு | |
| முகமது சிராஜ் | 4/108 |

**இந்தியா 296/10** (69.4 ஓவர்கள்)

| | |
|---|---|
| அஜிங்க்ய ரஹானே | 89 |
| ஷர்துல் தாக்குர் | 51 |
| பந்துவீச்சு | |
| பேட் கம்மின்ஸ் | 3/83 |

### 2-ஆவது இன்னிங்ஸ்

**ஆஸ்திரேலியா 270/8** (84.3 ஓவர்கள் (டிக்ளேர்))

| | |
|---|---|
| அலெக்ஸ் கேரி | 66* |
| மிச்செல் ஸ்டார்க் | 41 |
| பந்துவீச்சு | |
| ரவீந்திர ஜடேஜா | 3/58 |

**இந்தியா 234/10** (63.3 ஓவர்கள்)

| | |
|---|---|
| விராட் கோலி | 49 |
| பந்துவீச்சு | |
| லியான் | 4/41 |
| போலண்ட் | 3/46 |

EVA STALIN IA

**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
**https://www.evastaliniasacademy.in/**
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# சேலம் பூங்காவில் 16 அடி உயர கருணாநிதி சிலை

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்

**சேலம், ஜூன் 11:** கருணாநிதி நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, சேலம் அண்ணா பூங்கா வளாகத்தில் 16 அடி உயரத்தில் அமைக்கப்பட்டுள்ள முன்னாள் முதல்வர் கருணாநிதியின் வெண்கலச் சிலையை முதல்வர் மு.க.ஸ்டாலின் ஞாயிற்றுக்கிழமை திறந்து வைத்தார்.

முன்னாள் முதல்வர் கருணாநிதியின் நூற்றாண்டு விழாவையொட்டி, சேலம் மாநகராட்சி அண்ணா பூங்கா வளாகத்தில் முன்னாள் முதல்வர் கருணாநிதிக்கு 4 அடி உயரத்தில் பீடமும், 16 அடி உயரத்தில் முழு உருவ வெண்கலச் சிலையும் நிறுவப்பட்டுள்ளது.

3 நாள் சுற்றுப்பயணமாக சேலம் வந்த முதல்வர் மு.க.ஸ்டாலின், அண்ணா பூங்கா வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள கருணாநிதி முழு உருவச் வெண்கலச் சிலையை ஞாயிற்றுக்கிழமை திறந்து வைத்தார்.

இதையடுத்து கருணாநிதி சிலைக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

கருணாநிதி சிலையை வடிவமைத்த சிற்பி தீனதயாளனுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் தங்க மோதிரம் அணிவித்தார்.

**ஈரடுக்கு பேருந்து நிலையம் திறப்பு:** இதைத் தொடர்ந்து, சேலம் மாநகராட்சியில் சீர்மிகு நகரம் திட்டத்தின்கீழ் ரூ. 96.53 கோடி மதிப்பில் மறுசீரமைக்கப்பட்ட ஈரடுக்கு பேருந்து நிலையத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்.

இந்தப் பேருந்து நிலையத்துக்கு முத்தமிழறிஞர் கருணாநிதி நூற்றாண்டு மாநகரப் பேருந்து நிலையம் என பெயர் வைக்கப்பட்டுள்ளது. இதற்கான கல்வெட்டையும் முதல்வர் திறந்து வைத்தார்.

மேலும், ஈரடுக்கு பேருந்து நிலையத்தில் இருந்து பேருந்துகள் இயக்கத்தையும் முதல்வர் தொடங்கி வைத்தார்.

ரூ. 10.58 கோடியில் மறுசீரமைக்கப்பட்ட போஸ் மைதானம், ரூ. 33.60 கோடியில் மறுசீரமைக்கப்பட்ட நேரு கலையரங்கம், ரூ.12.34 கோடியில் அமைக்கப்பட்ட ஆனந்தா பாலம் வாகன நிறுத்துமிடம், ரூ. 14.97 கோடியில் மறுசீரமைக்கப்பட்ட வ.உ.சி. மார்க்கெட், புதிய பேருந்து நிலையம் அருகில் ரூ. 13.04 கோடியில் அமைக்கப்பட்ட அடுக்குமாடி வாகனம் நிறுத்துமிடம் உள்ளிட்ட கட்டடங்களையும் முதல்வர் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் அமைச்சர்கள் துரைமுருகன், கே.என். நேரு, எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், எஸ்.ரகுபதி, மா.மதிவேந்தன், நகராட்சி நிர்வாகம், குடிநீர் வழங்கல் துறை கூடுதல் தலைமைச் செயலர் சிவ்தாஸ் மீனா, நகராட்சி நிர்வாக இயக்குநர் பொன்னையா, சேலம் மேயர் ஆ.ராமச்சந்திரன், சேலம் ஆட்சியர் செ. கார்மேகம் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

மேலும், எம்.பி.க்கள் எஸ்.ஆர். பார்த்திபன் (சேலம்), கௌதம் சிகாமணி (கள்ளக்குறிச்சி), ஏ.கே.பி.சின்ராஜ் (நாமக்கல்), சேலம் மத்திய மாவட்ட திமுக செயலரும் எம்எல்ஏவுமான ஆர்.ராஜேந்திர உள்ளிட்ட நிர்வாகிகளும் கலந்து கொண்டனர்.



சேலம் அண்ணா பூங்கா வளாகத்தில் நிறுவப்பட்டுள்ள முன்னாள் முதல்வர் கருணாநிதியின் முழு உருவ வெண்கலச் சிலையை ஞாயிற்றுக்கிழமை திறந்து வைத்த முதல்வர் மு.க.ஸ்டாலின். உடன், அமைச்சர்கள் துரைமுருகன், கே.என்.நேரு, எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், எஸ்.ரகுபதி, மா.மதிவேந்தன், எம்எல்ஏ ஆர்.ராஜேந்திரன், மேயர் ஆ.ராமச்சந்திரன், ஆட்சியர் செ.கார்மேகம் உள்ளிட்டோர்.

**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
**https://www.evastaliniasacademy.in/**
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# நிர்வாகம் மீதான மக்களின் நம்பிக்கையை அதிகரிப்பது அரசு ஊழியர்களின் பொறுப்பு

**பிரதமர் மோடி**

**புது தில்லி, ஜூன் 11:** அரசு நிர்வாக அமைப்புமுறை மீதான மக்களின் நம்பிக்கையை அதிகரிப்பது அனைத்து அரசு ஊழியர்களின் பொறுப்பு என்று பிரதமர் நரேந்திர மோடி கூறினார்.

அரசு ஊழியர்களின் திறன் மேம்பாடு மற்றும் அரசின் சேவை வழங்கலை மேம்படுத்துவதன் முக்கியத்துவம் குறித்தும் அவர் வலியுறுத்தினார்.

குடிமைப் பணி பயிற்சி நிறுவனங்களுக்கு இடையே ஒருங்கிணைப்பை வளர்ப்பதுடன், நாடு முழுவதும் அரசு ஊழியர்களின் பயிற்சி உள்கட்டமைப்பை வலுப்படுத்தும் நோக்கில் திறன் கட்டமைப்பு ஆணையம் சார்பில் முதல்முறையாக தேசிய பயிற்சி மாநாடு, தில்லி பிரகதி மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

மத்திய பயிற்சி நிறுவனங்கள், மாநில நிர்வாக பயிற்சி நிறுவனங்கள், மண்டல பயிற்சி நிறுவனங்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களைச் சேர்ந்த 1,500-க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் பங்கேற்ற இம்மாநாட்டில், பிரதமர் நரேந்திர மோடி உரையாற்றினார். அப்போது, தனது நீண்ட நெடிய அரசியல் மற்றும் நிர்வாக அனுபவங்களில் இருந்து பல்வேறு நிகழ்வுகளை குறிப்பிட்ட அவர், அரசுப் பணியின் சேவை நோக்கம், சாதாரண மக்களின் கனவை நனவாக்கும் கடமை, அமைப்புமுறையில் அனைவரின் அனுபவத்தையும் பயன்படுத்துவது, மக்கள் கூட்டுறவின் முக்கியத்துவம், அமைப்புமுறையில் புத்தாக்க மேம்பாடு உள்ளிட்டவை குறித்து அவர் விவரித்தார். இதுதொடர்பாக, பிரதமர் பேசியதாவது:

முதல்வராக முன்பு பணியாற்றியபோதும், இப்போது பிரதமராக பணியாற்றும்போது எனது அனுபவங்களின்படி, அரசில் திறமையான, அர்ப்பணிப்புமிக்க, உறுதிப்பாடு நிறைந்த அதிகாரிகளுக்கு எப்போதும் குறைவில்லை.

ராணுவ அமைப்பானது, மக்களின் அசைக்க முடியாத நம்பிக்கையை கட்டியெழுப்பியுள்ளது. அதேபோல், அரசு நிர்வாக அமைப்புமுறை மீதான நம்பிக்கையை அதிகரிப்பது அனைத்து அரசு ஊழியர்களின் பொறுப்பாகும்.

**பயிற்சி பணியின் முக்கியத்துவம்:** அரசு அதிகாரிகளுக்கு அளிக்கப்படும் பயிற்சியானது, அரசின் ஒட்டுமொத்த அணுகுமுறையையும் உள்ளடக்கியதாக இருப்பதுடன், அவர்களின் திறனை வளப்படுத்துவதாக அமைய வேண்டும்.

பயிற்சி நிறுவனங்களில் பணி நியமனம் பெறுவது, தண்டனையாக கருதப்பட்ட அணுகுமுறை முன்பு இருந்தது. ஆனால், இப்போது அந்த நிலை மாறி வருகிறது. பயிற்சி நிறுவனங்கள், நாட்டின் முக்கியத்துவம் வாய்ந்த அமைப்புகளாக மாறியுள்ளன.

அரசு ஊழியருக்கு வழங்கப்படும் பயிற்சி, மக்கள் கூட்டுறவின் முக்கியத்துவத்தை கொண்டிருக்க வேண்டும். தூய்மை இந்தியா, லட்சிய மாவட்டங்கள் திட்டம், நீர்நிலைகளை மேம்படுத்தும் அம்ரித் சரோவர் திட்டம், எண்ம இந்தியா திட்டம் ஆகியவற்றின் வெற்றி, மக்கள் கூட்டுறவால்தான் சாத்தியமானது.

**'கர்மயோகி' திட்டம்:** அரசு ஊழியர்களுக்கு ஒவ்வொரு நிலையிலும் பயிற்சி முக்கியம். அந்த அடிப்படையில்தான், தேசிய குடிமைப் பணிகள் திறன் கட்டமைப்பு திட்டம் (கர்மயோகி) தொடங்கப்பட்டது.

அரசு ஊழியர்களின் நோக்கம், சிந்தனை, அணுகுமுறை ஆகியவற்றை மேம்படுத்துவதே இத்திட்டத்தின் குறிக்கோள். இதன் பயனாக, நிர்வாக அமைப்புமுறையும் மேம்படும் என்றார் பிரதமர் மோடி.

இதனிடையே, ட்விட்டரில் அவர் வெளியிட்ட பதிவில், 'கற்றல் மற்றும் சிறந்த சேவைக்கான முயற்சிகளின் ஒரு பகுதியாக நடைபெற்ற தேசிய பயிற்சி மாநாட்டில் பங்கேற்றேன். திறன் கட்டமைப்பு, குறைபாடுகளைக் களைதல், சேவை வழங்கல் மேம்பாடு உள்ளிட்டவற்றின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தேன். புதிய இந்தியாவை உருவாக்க சவால்களை வாய்ப்புகளாக்க தொடர்ந்து பணியாற்றுவோம்' என்று குறிப்பிட்டுள்ளார்.



புது தில்லியில் தேசிய பயிற்சி மாநாட்டில் பேசிய பிரதமர் நரேந்திர மோடி.

# அடையாறு பகுதியில் மரக்கன்றுகள் நடும் பணி: தலைமைச் செயலர் ஆய்வு

**சென்னை, ஜூன் 11:** சென்னை மாநகராட்சி, கோட்டூர்புரம், காந்தி நகரில் அடையாறு ஆற்றங்கரையோரப் பகுதியில் மரக்கன்றுகள் நடும் பணிகளை தலைமைச் செயலர் வெ.இறையன்பு ஆய்வு செய்தார்.

சென்னை மாநகராட்சி, அடையாறு மண்டலம் 173-ஆவது வார்டு காந்தி நகர் பூங்காவில் ரூ.9.41 கோடியில் சுற்றுச்சுவர் அமைத்தல், செடிகளுடன் கூடிய நடைபாதை அமைத்தல், பசுமையுடன் புல்வெளிகள் அமைத்தல், மரக்கன்றுகள் நடுதல், கண்காணிப்பு கேமராக்கள் பொருத்துதல் உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இப்பணிகளை தலைமைச் செயலர் இறையன்பு ஞாயிற்றுக்கிழமை ஆய்வு செய்தார்.

தொடர்ந்து, கனால் பேங்க் சாலை, பாட்ரிசியன் கல்லூரி அருகில் சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை சார்பில் ரூ.1.99 கோடியில் 4.99 ஏக்கரில் அமைக்கப்பட்டு வரும் அடர்வனத்துடன் கூடிய கால்பந்து விளையாட்டு மைதானத்தில் 1,402 மரக்கன்றுகள் நடும் பணிகளை அவர் ஆய்வு செய்தார்.

பின்னர், அடையாறு ஆற்றங்கரையோரங்களில் சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை சார்பில் ரூ.5.40 கோடியில் திரு.வி.க. பாலம் முதல் எம்.ஆர்.டி.எஸ். பாலம் வரை 2.4 கி.மீ. தொலைவுக்கு நடப்பட்டுள்ள 35,785 மரக்கன்றுகள், எம்.ஆர்.டி.எஸ். முதல் கோட்டூர்புரம் பாலம் வரை ரூ.5.80 கோடியில் 2.2 கி.மீ. தொலைவுக்கு நடப்பட்டுள்ள 23,039 மரக்கன்றுகள் ஆகியவற்றை ஆய்வு செய்ததுடன், அங்கு உடற்பயிற்சி மற்றும் நடைப்பயிற்சி மேற்கொள்ளும் பொதுமக்களிடம் கலந்துரையாடினார்.

மேலும், கோட்டூர்புரம் சித்ரா நகரில் அகற்றப்பட்ட ஆக்கிரமிப்பு வீடுகளின் கட்டடக் கழிவுகளை உடனடியாக அகற்றவும், ஆற்றங்கரைகளின் ஓரங்களை சமப்படுத்தி, பலப்படுத்தவும் அதிகாரிகளுக்கு, தலைமைச் செயலர் அறிவுறுத்தினார்.

ஆய்வின்போது, சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.ராதாகிருஷ்ணன், இணை ஆணையர் (பணிகள்) டாக்டர் ஜி.எஸ்.சமீரன், துணை ஆணையர்கள் ஷரண்யா அறி, எம்.பி.அமித், (தெற்கு வட்டாரம்) , மாமன்ற உறுப்பினர்கள், தலைமைப் பொறியாளர்கள் எஸ்.ராஜேந்திரன் (பொது) புவனேஷ்வரன் (பூங்கா) உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.


சென்னை காந்தி நகர் அடையாறு ஆற்றங்கரையோரத்தை ஞாயிற்றுக்கிழமை பார்வையிட்டு ஆய்வு செய்த தலைமைச் செயலர் வெ.இறையன்பு. உடன், மாநகராட்சி ஆணையர் ஜெ.ராதாகிருஷ்ணன், இணை ஆணையர் கீ.சு.சமீரன், துணை ஆணையர்கள் சரண்யா அறி, எம்.பி.அமித்.

# குழந்தைத் தொழிலாளர் இல்லாத தமிழகத்தை உருவாக்க வேண்டும்: மகளிர் ஆணையத் தலைவர்

**சென்னை, ஜூன் 11:** தமிழக முதல்வரின் கருத்துபடி 2025-ஆம் ஆண்டுக்குள் குழந்தைத் தொழிலாளர் இல்லாத தமிழகத்தை உருவாக்க வேண்டும் என தமிழக மகளிர் ஆணையத் தலைவர் ஏ.எஸ். குமாரி தெரிவித்தார்.

உலக குழந்தை தொழிலாளர் எதிர்ப்பு தினத்தையொட்டி, குழந்தை உரிமைகள் இயக்கம், தமிழ்நாடு வீட்டு வேலைத் தொழிலாளர் நல அறக்கட்டளை சார்பில் குழந்தைத் தொழிலாளர் எதிர்ப்பு நடைப்பயணம் பெசன்ட் நகர் கடற்கரை சாலையில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

நடைப்பயணத்தை தொடங்கி வைத்து மகளிர் ஆணையத் தலைவர் குமாரி பேசியதாவது:

குழந்தைகள் பணியில் அமர்த்தப்படுவதை தடுக்க தமிழக அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. முதல்வர் மு.க.ஸ்டாலின் கருத்துபடி 2025-க்குள் குழந்தை தொழிலாளர் இல்லாத தமிழகத்தை உருவாக்க அனைத்து தரப்பினரும் இணைந்து பணியாற்ற வேண்டும். வாழ்க்கைத் தரம் மேம்பட குழந்தைகளுக்கான கல்வியை பெற்றோர்கள் உறுதிப்படுத்த வேண்டும்.

பள்ளிகளில் காலை சிற்றுண்டி வழங்கப்படும் என்ற தமிழக அரசின் திட்டம் மூலம் குழந்தைக் கல்வி மேலும் ஊக்கப்படுத்தப்படும் என்றார் அவர்.

சிறார்களை பணியில் அமர்த்துவதை எதிர்த்து கோஷங்களை எழுப்பியும், விழிப்புணர்வு பதாகைகளை கையில் ஏந்தியபடியும் 800-க்கும் மேற்பட்ட குழந்தைகள் நடைப்பயணத்தில் பங்கேற்றனர்.

இந்த நடைப்பயணத்தில் தமிழ்நாடு வீட்டு வேலைத்தொழிலாளர் நல அறக்கட்டளை மாநில ஒருங்கிணைப்பாளர் ஜோசஃபின் அமலா வளர்மதி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.




சென்னை பெசன்ட் நகர் கடற்கரைச் சாலையில் தமிழ்நாடு வீட்டு வேலைத் தொழிலாளர் நல அறக்கட்டளை சார்பில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தின விழிப்புணர்வு நடைப்பயணத்தில் பங்கேற்ற குழந்தைகள்.

EVA STALIN

# 2025-க்குள் குழந்தைத் தொழிலாளர் இல்லா தமிழகமே இலக்கு

## முதல்வர் மு.க.ஸ்டாலின்

**சென்னை, ஜூன் 11:** வரும் 2025-ஆம் ஆண்டுக்குள் குழந்தைத் தொழிலாளர் இல்லாத தமிழகத்தை உருவாக்குவதே இலக்கு என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.



குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தினத்தையொட்டி, அவர் ஞாயிற்றுக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

குழந்தைப் பருவம், ஒவ்வொருவருக்கும் ஏற்படும் மகத்தான வாழ்க்கை நிலை. குழந்தைகள் விளையாடியும், கலந்துரையாடியும், கதை பேசியும் களிக்க வேண்டிய பருவத்தில், அவர்களைப் பள்ளிகளிலிருந்துப் பிரித்தெடுத்து, பட்டறைகளுக்கு அனுப்புவது மாபெரும் குற்றம்.

குழந்தைகள் பள்ளிகளுக்குப் படிப்பதற்கு மட்டும் செல்வதில்லை. சகக் குழந்தைகளோடு பூக்களை ரசிப்பதற்கும், புன்னகைகளைப் படரவிடுவதற்கும், பூமியின் உயிர்த் துடிப்பை உணர்வதற்கும்தான். கற்றுக்கொள்ள மட்டுமல்ல; உற்றுநோக்கவும் பள்ளிகளே அவர்களுக்கு நாற்றங்கால்களாக இருக்கின்றன.

குழந்தைத் தொழிலாளர் முறையை முற்றிலுமாக அகற்றுவது அவர்களுக்கு அளிக்கப்படும் மிகப் பெரிய விடுதலை, வாழ்நாள் பரிசு. தமிழக அரசு அதனைத் தன் தலையாய கடமையாகக் கருதி, விழிப்புணர்வை விதைத்துக் கொண்டு வருகிறது.

மாபெரும் இயக்கமாக இது ஓங்கி வளர்ந்திருப்பதால், குழந்தைத் தொழிலாளர் முறையை அகற்றுவதில் தமிழகம் முன்னோடி மாநிலமாக முன்னேறியிருக்கிறது.

2025 ஆம் ஆண்டுக்குள் குழந்தைத் தொழிலாளர் இல்லாத தமிழகத்தை உருவாக்க வேண்டுமென்பதே அரசின் இலக்கு.

குழந்தைகள் செம்மையாகப் படிக்க, கட்டணமில்லா கல்வி; கைகளில் தவழும் பாடப் புத்தகங்கள்; எழுதிப் பழக நோட்டுப் புத்தகங்கள்; அவையனைத்தையும் வைக்க புத்தகப் பை; அணிந்து மகிழ சீருடை; பசியின்றிப் படிக்க காலைச் சிற்றுண்டியும்; மதிய உணவும்; வசதியாய் நடக்கக் காலணி; அசதியின்றி பயணிக்கப் பேருந்து அட்டை; ஓட்டிப் பழக மிதிவண்டி என்று உதவிகளை இரண்டு கைகளாலும் தமிழக அரசு அள்ளி அள்ளி வழங்குகிறது.

படிப்பு சுமையாக இல்லாமல், சுகமாக மாறவே இத்தனை நலத் திட்டங்கள். தமிழக அரசு வகுக்கும் திட்டங்களை, அரசுத் துறைகள் செயல்படுத்துவதுடன், குழந்தைத் தொழிலாளர் முறையை முற்றிலும் அகற்ற நிறுவனங்களும் ஒத்துழைப்பு நல்கவேண்டும்.

அரசு சாரா நிறுவனங்களும், உள்ளாட்சி அமைப்புகளும், தொழிற்சங்கங்களும், தொழில் நிறுவனங்களின் உரிமையாளர்களும் ஒரே குரலில் ஓங்கி ஒலித்தால், குழந்தைத் தொழிலாளர் இல்லாத, குவலயம் போற்றும் ஒளிமிகு தமிழகம் உருவாகும் எனத் தெரிவித்துள்ளார் அவர்.